செய்தி வெளியீடு எண்: 41 நாள்: 28.02.2018

***தேனி மாவட்டம்,***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***பெரியகுளம் அரசு தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு,***
***தரமான சிகிச்சை அளித்திட உத்தரவு:-***

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பெரியகுளம் அரசு தலைமை மருத்துவமனையில், புறநோயாளிகள் பிரிவு, தடுப்பூசி பிரிவு, ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம், மகப்பேறு சிகிச்சை பிரிவு, குழந்தைகள் பிரிவு, பரிசோதனை ஆய்வகம், இயன்முறை சிகிச்சை பிரிவு (Physiotherapy), மருந்தகம், அவசர சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் இன்று (28.02.2018) நேரடியாக சென்று களஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, பெரியகுளம் அரசு தலைமை மருத்துவமனையில் வருகை பதிவேட்டில் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை, வருகைபுரிந்த மருத்துவர்கள், விடுப்பில் உள்ள மருத்துவர்கள், சிறப்பு பிரிவு மருத்துவர்கள் குறித்து பார்வையிட்டார். தடுப்பூசி பிரிவில் கர்ப்பிணி பெண்கள், குழந்தைகளுக்கு போடப்படும் தடுப்பூசி குறித்தும், புறநோயாளிகள் பிரிவிற்கு சென்று சிகிச்சை பெற வந்துள்ள பொதுமக்கள், சிகிச்சை அளிக்கப்படும் விதம், ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையத்தில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மகப்பேறு சிகிச்சை பிரிவில் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கைகள், குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள், நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் இயன்முறை சிகிச்சைகள், பொதுமக்களுக்கு மருந்தகத்தில் வழங்கப்படும் மருந்து, மாத்திரைகளின் இருப்பு, அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள், இரத்த வங்கியில் அவசர தேவைக்காக தேவையான அளவு இரத்தம் இருப்பு, அறுவை சிகிச்சை பிரிவில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை போன்றவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, மருத்துவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு தமிழக மக்கள் அனைவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி உயர்ந்த சிகிச்சையினை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், மருத்துவம் சார்ந்த பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதியுதவித்திட்டம், அம்மா பெட்டகம் வழங்கும் திட்டம், முழு உடற் பரிசோதனைத் திட்டம் போன்ற ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பெரியகுளம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற வருகின்ற பொதுமக்களுக்கு மருத்துவர்கள் கனிவுடன், பொறுமையாக நோயின் தன்மை குறித்து எடுத்துக்கூறி, முறையான சிகிச்சை அளித்திடவும், சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு தரமான உயர் சிகிச்சை வழங்கிடவும், மருத்துவமனையின் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேணிக்காத்திடவும், நோயாளிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி போன்றவற்றை முறையாக பராமரித்து வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.வீ.செல்வராஜ் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு. ஆசியா அவர்கள், கண்காணிப்பாளர் கே.எஸ்.குமார் அவர்கள், மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**